தமிழாக்கம் : **http://Translation.Shaadmaani.Net**

**2. Q. If a man is allowed to have more than one wife, then why does Islam prohibit a woman from having more than one husband?**

2. கேள்வி :

ஒரு ஆண் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகளை மணக்கஅனுமதிக்கும் பொழுது, ஏன் இஸ்லாம் ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களை மணக்க தடை செய்கிறது ?

Ans :

A lot of people, including some Muslims, question the logic of allowing Muslim men to have more than one spouse while denying the same 'right' to women.

Let me first state emphatically, that the foundation of an Islamic society is justice and equity. Allah has created men and women as equal, but with different capabilities and different responsibilities. Men and women are different, physiologically and psychologically. Their roles and responsibilities are different. Men and women are equal in Islam, but not identical.

பதில் – 2 :

பல பேர், சில முஸ்லிம்கள் உள்பட, ஒன்றுக்கும் மேற்பட்ட பெண்களை மணக்க ஆணுக்கு அனுமதி அளித்து, பெண்ணுக்கு அந்த உரிமை வழங்க மறுப்பதற்கு உண்டான இஸ்லாமிய தர்க்கத்தை வினாவிக்கின்றனர்.

இஸ்லாமிய சமுதாயம் நியாயம், சம உரிமை ஆகியவற்றை அடிப்படையாக கொண்டுள்ளது என திடமாக விவரிக்க நான் விரும்புகிறேன். அல்லாஹ், ஆணையும் பெண்ணையும் சமமாக படைத்துள்ள போதிலும் மாறுபட்ட செயல் வல்லமை, திறன் களையுடனும், வித்தியாசமான பொறுப்புகள், வேறு பட்ட கடமைகளையும் அளித்துள்ளான். ஆண்களும் பெண்களும், உடலியல், உளவியல் ஆகிய இரண்டிலும், முற்றிலும் மாறுபட்டவர் ஆவர்.

அவர்களின் பாத்திரப் பங்குகளும் (roles), பொறுப்புகளும் வெவ்வேறு. இஸ்லாமில் ஆணும் பெணும் சமம், ஆனால் உடற் கூற்றாக ஒரே மாதிரி இல்லை.

Surah Nisa' Chapter 4 verses 22 to 24 gives the list of women with who you can not marry and it is further mentions in Surah Nisa' Chapter 4 verse 24 "Also (prohibited are) women already married"

The following points enumerate the reasons why polyandry is prohibited in Islam:

ஸூரா நிஸா, அத்தியாயம்-4, வசனம் : 22-24 நீங்கள் மணக்கக்கூடாத பெண்களை பட்டியலிட்டு காட்டுகிறது. அடுத்து அதே அத்தியாய வசனம் : 24-ல் ஏற்கனவே மணமான பெண்ணை மணக்க தடை விதிக்கப்பட்டுள்ளது.

அடுத்து வரும் புள்ளி விவரங்கள் ஒரு பெண் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களை மணக்க ஏன் இஸ்மாம் தடை விதிக்கிறது என்பதை பட்டியலிட்டு காட்டுகின்றன.

1. If a man has more than one wife, the parents of the children born of such marriages can easily be identified. The father as well as the mother can easily be identified. In case of a woman marrying more than one husband, only the mother of the children born of such marriages will be identified and not the father. Islam gives tremendous importance to the identification of both parents, mother and father. Psychologists tell us that children who do not know their parents, especially their father undergo severe mental trauma and disturbances. Often they have an unhappy childhood. It is for this reason that the children of prostitutes do not have a healthy childhood. If a child born of such wedlock is admitted in school, and when the mother is asked the name of the father, she would have to give two or more names! I am aware that recent advances in science have made it possible for both the mother and father to be identified with the help of genetic testing. Thus this point which was applicable for the past may not be applicable for the present.

1. ஓர் ஆணுக்கு ஒன்றுக்கு மேல் மனைவியர் இருப்பின், அதனால் பிறந்த குழந்தைகளின் தாயையும், தந்தையையும் அடையாளம் கண்டுக்கொள்ள இயலும். ஒரு பெண் ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களை மணந்தாரானால், அந்த குழந்தையின் தாயை மட்டும் அடையாளம் கண்டுகொள்ள இயலும். தந்தையை அடையாளம் கண்டுகொள்வது கடினம். இரு பெற்றோர்களையும் அதாவது

தாயையும், தந்தையையும் அடையாளம் கொள்வதில் இஸ்லாம் முக்கியத்துவம் அளிக்கிறது. உளவியல் நிபுணர்களின் கருத்துப்படி, பெற்றோரைப் பற்றி அறியாத, முக்கியமாக தந்தையைப் பற்றி தெரியாத குழந்தைகளின் மன நிலை பாதிக்கப்பட்டு அவர்கள் பல இக்கட்டான நிலைக்கு ஆளாக்கப்படுகின்றனர். அவர்கள் அதிருப்தியான பிள்ளைப் பருவத்தை கழிக்கின்றனர். இந்த காரணத்தினால் தான் விலை மாதுக்களின் குழந்தைகள் சுகாதாரமற்ற, நிம்மதியற்ற தன் குழந்தைப் பருவத்தை கழிக்கின்றனர். இப்பேர் பட்ட திருமணத்தால் பிறந்த குழந்தையை பள்ளியில் சேர்க்கும் பொழுது, தாயிடம் அக்குழந்தையின் தந்தைப் பெயரைக் கேட்டால், அவர் இரண்டு அல்லது மூன்று பெயர்களை கூற வேண்டியதிருக்கும். விஞ்ஞான வளர்ச்சியால் தற்பொழுது மரபணு சோதனை (genetic test) வாயிலாக தாயையும் தந்தையையும் அறியும் சாத்தியம் உண்டு என்பதை நான் அறிவேன். முற்காலத்தில் பொருந்திய இந்த அலகு தற்காலத்திற்கு பொருந்தாமல் இருக்கலாம்.

2. Man is more polygamous by nature as compared to a woman.

2. இயற்கையாகவே ஆண் பலதார மணம் புரியும் குணம் உடையவன்.

3. Biologically, it is easier for a man to perform his duties as a husband despite having several wives. A woman, in a similar position, having several husbands, will not find it possible to perform her duties as a wife. A woman undergoes several psychological and behavioral changes due to different phases of the menstrual cycle.

உயிரியல் ரீதியாக ஓர் ஆண் பல மனைவிகளை கொண்டவனாக இருந்தாலும் தனது கடமைகளை செம்மையாக செய்வது அவனுக்கு சுலபம். இதே நிலையிலருக்கும் ஒரு பெண் பல கணவர்களுக்கு தான் மனைவியாக இருந்து தன் கடமைகளை செய்வது சாத்தியமாகாது. ஒரு பெண் சுழற்சியாக (தொடர்ந்து மாதாமாதம் ) தன் மாத விலக்கு சமயங்களில் பல உளவியல், மன நிலை, நடத்தை (psychological and behavioral) மாற்றங்களுக்கு ஆளாகிறாள்.

4. A woman who has more than one husband will have several sexual partners at the same time and has a high chance of acquiring venereal or sexually transmitted

diseases which can also be transmitted back to her husband even if all of them have no extra-marital sex. This is not the case in a man having more than one wife, and none of them having extra-marital sex.

ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களைக் கொண்டவள், அவர்கள் யாவரும் மண வாழ்விற்கு அப்பாற்ப்பட்டு மற்ற பெண்களுடன் தொடர்பு கொள்ளாத பட்சத்திலும், பல பாலியல் நோய்கள் தாக்கப்பட்டவளாக இருப்பாள்.இந்நோய்கள் திரும்பி தன் அனைத்து கணவர்களையும் தாக்கும். பல தார மணத்திலிருக்கும் ஓர் கணவனுக்கும், பல மனைவியர்க்கும், அவர்கள் யாவரும் மண வாழ்விற்கு அப்பாற் பட்டு மற்ற ஆணுடனோ, பெண்ணுடனோ தொடர்பு கொள்ளாத பட்சத்தில் இந்த மாதிரியான பாதிப்பு உண்டாகாது.

The above reasons are those that one can easily identify. There are probably many more reasons why Allah, in His Infinite Wisdom, has prohibited polyandry.

மேற் கூறப்பட்ட சில காரணங்கள், நாம் கண் கூடாக கண்டு அடையாளம் காட்டக்கூடியவை. நமக்குத் தெரியாமல் இருக்கக்கூடிய இன்னும் எத்தனையோ காரணங்களால் அல்லாஹ் பெண்கள் ஒரே சமயத்தில் ஒன்றுக்கு மேற்பட்ட கணவர்களை மணக்க தடைவிதித்துள்ளான்.